பண்பாட்டலுவல்கள் அலகு சுற்றுநிருபம் : **2024/02**

எனது இல : NP/03/09/CMA/16
பண்பாட்டலுவல்கள் அலகு,
செம்மணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
12.01.2024.

சம்பந்தப்பட்டவர்களுக்கு,

## இளங்கலைஞர் விருது தெரிவு - 2024

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகினால் மேற்கொள்ளப்படும் விருது தெரிவுகளில் 40 வயதுக்கு உட்பட்ட கலைஞர்களுக்கு வழங்கப்படும் விருதான இளங்கலைஞர் விருதுக்கு பொருத்தமான கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் அலகினால் வருடா வருடம் நடத்தப்படும் பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வில் விருதுகள் வழங்கல் வைபவம் நடைபெற்று வருகின்றது. இந்தவகையில் வடமாகாணத்தில் கலைத்துறையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுவரும் 40 வயதுக்கு உட்பட்ட கலைஞர்களை கௌரவிப்பதற்காக வழங்கப்படும் விருதினையே இளங்கலைஞர் விருது எனும் பதம் விளக்கி நிற்கிறது.

**தேர்வு முறை**

1. பத்திரிகைகள் வாயிலாகவும், மாகாண மற்றும் கல்வி அமைச்சு இணையத்தள வாயிலாகவும், கலாசார உத்தியோகத்தர்கள் மூலமாகவும் இளங்கலைஞர் தெரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.
2. விண்ணப்பபடிவங்கள் கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு உரிய ஆவணங்களுடன் பண்பாட்டலுவல்கள் அலகிற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. தெரிவானது துறைசார்ந்த நிபுணர்கள் மூன்று பேருடன், கிடைக்கப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மாவட்டங்களின் பிரதிநிதியாக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் அல்லது அவரால் குறிப்பிடப்படும் பிரதிநிதியாக ஒருவர் விருதுத் தெரிவு இடம்பெறும் தினங்களில் கலந்துகொள்ள முடியும். துறைசார்ந்த விண்ணப்பங்கள் பிரதேச செயலக ரீதியாக ஒவ்வொரு துறைக்கும் ஐந்து விண்ணப்பங்கள் எனும் அடிப்படையில் பிரதேச செயலக மதிப்பீட்டுக்குழுவினால் தெரிவுசெய்யப்பட்டு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**போட்டி நிபந்தனைகள்**

1. விண்ணப்பம் கோரப்படும் வருடத்திற்கு முன்னைய வருடத்தின் டிசம்பர் 31ஆம் திகதி அன்று 40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர் வடமாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு இங்கு வசிப்பவராக இருக்க வேண்டும்.
3. விண்ணப்பங்கள் யாவும் கலாசார உத்தியோகத்தர்களினூடாகவே அனுப்பப்பட வேண்டும்.
4. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.
5. விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
6. கடந்த காலங்களில் இவ்விருதினைப் பெற்றுள்ள கலைஞர்கள் மீளவும் விண்ணப்பிக்க முடியாது.

விருது கோரப்படும் துறைகள்

1. சிறுகதை
2. நாவல்
3. நாடகம்
4. நாடக எழுத்துரு
5. கவிதை இலக்கியம்
6. நடனம்,
7. குறும்படம்
8. ஓவியம்,
9. சிற்பம்,
10. இசைநாடகம்
11. இசைக்கலை (வாய்ப்பாட்டு, பண்ணிசை, இசையமைப்பு)
12. வாத்தியக்கலை (தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், வீணை, ஓர்கன், ஆர்மோனியம், உடுக்கு, பறை, கடம், முகர்சிங் போன்றன)
13. வாத்தியக்கருவிகள் உருவாக்கம் (தவில், நாதஸ்வரம், மிருதங்கம், உடுக்கு, பறை, போன்றன.)
14. கூத்து (வடமோடி, தென்மோடி, சிந்துநடைக்கூத்து, மன்னார்ப்பாங்கு, முல்லைமோடி)
15. கிராமியக் கலைகள் (கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், வசந்தன் கூத்து, வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், ஒயிலாட்டம், மகுடி போன்ற தொடர்புடைய கலைகள்)
16. ஒப்பனைக்கலை (நாடகங்கள், கூத்துக்கள், நடனக் கலைத்துறைகளுக்கானவை)

மேற்படி போட்டிகளுக்குரிய விண்ணப்பங்களை 31.03.2024 ஆம் திகதிக்கு முன்னர் பண்பாட்டலுவல்கள் அலகிற்கு கிடைக்ககூடியவாறு தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தருடாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

உரிய திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப படிவத்தினை பண்பாட்டலுவல்கள் அலகில் அல்லது தங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தரிடம் அல்லது வடமாகாண மற்றும் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : www.np.gov.lk / www.edumin.np.gov.lk

தொலைபேசி இல. : 0212054105 / 0213202568

ம.பற்றிக் டிறஞ்சன்,
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.

ம.பற்றிக் டிறஞ்சன்
செயலாளர்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடக்கு மாகாணம்

# இளங்கலைஞர் விருது - 2024
## விண்ணப்பப்படிவம்

(ஆவணப் பிரதிகள் இல்லாத சரியான அளவில் வர்ணப்புகைப்படம் ஒட்டப்படாத மற்றும் பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.)

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் தமிழில்

வர்ணப்புகைப்படம்
கடவுச்சீட்டு
அளவு
(35mmx45mm)

2. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் (ஆங்கிலத்தில் எழுத்து கெப்பிற்றல்)

3. வேறு பெயர்கள்

4. பிறந்த இடம் :

(பிறப்பு சான்றிதழ் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

5. பிறந்த திகதி:

6. 2023.12.31 திகதியன்று வயது:-

வருடம் மாதம் திகதி

7. தேசிய அடையாளஅட்டை இல

(தேசிய அடையாள அட்டை நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)

8. பால் : பெண் ஆண்

9. நிரந்தர முகவரி :

வாழும் காலம்
(வருடங்கள்)

10. தற்காலிக முகவரியில் வசிப்பதாயின் அதன் விபரம் :

வாழும் காலம் வருடங்கள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

11. மாவட்டம் : ..............................................................................................

12. பிரதேச செயலாளர் பிரிவு: ...................................................................................

13. கிராம சேவையாளர் பிரிவு: ...................................................................................

14. தொலைபேசி இல: ..............................................................................................

15. கல்வித் தகைமை: ..............................................................................................

16. விருதுக்கு விண்ணப்பிக்கும் கலைத்துறை: ....................................................................

17. ஏனைய தேர்ச்சி பெற்ற கலைத்துறை: ......................................................................

18. விருதுக்கு விண்ணப்பிக்கும் கலைத்துறையின் சேவைக் காலம்: ..........................................

கலை ஆக்கங்கள் யாவும் சொந்தப் படைப்பாக இருத்தல் முக்கியம். இன்னொரு கலைஞனின் படைப்பை பிரதி பண்ணிய ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

19. இதுவரை ஆற்றிய கலைச் சேவையைக் குறிப்பிடுக. (ஆணப்பிரதிகள் நிழற்பிரதியாகவோ, புகைப்படம், வீடியோ மூலமாகவோ உறுதிப்படுத்தி இணைக்கப்படல் வேண்டும்) கீழே இடம் போதாவிட்டால் பிறிதொரு தாளில் எழுதி இணைக்கவும்.

| தொ. இல | கலைப்படைப்பு ஆண்டு | கலைப்படைப்பின் பெயர் | கலைஞனின் செயற்பாடு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

20. இதுவரை பிரதேச . மாவட்ட . தேசிய மட்டத்தில் கிடைக்கப்பெற்ற விருதுகள் தொடர்பானவை. (ஆவணப்பிரதிகள் உறுதிப்படுத்தி இணைக்கப்படல் வேண்டும்)

| தொ. இல | விருதுவழங்கிய ஆண்டு | விருதுப் பெயர் | வழங்கிய நிறுவனம் | பிரதேச மட்டம் | மாவட்ட மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேற்படி என்னால் தரப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................  ..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்  திகதி

மேற்படி கலைஞரால் வழங்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும், இவர் ......... ஆம் ஆண்டு தொடக்கம் எனது பிரதேசத்தில் வசிக்கின்றார். என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

..........................................  ..............................
கிராம உத்தியோகத்தர் ஒப்பம்  திகதி
(பதவி முத்திரை)

............................................................... கலைஞரை .........................................
கலைத்துறையில் 2024ஆம் ஆண்டிற்குரிய இளங்கலைஞர் விருதிற்காக சிபார்சு செய்கின்றேன். இதுவரை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இளம் கலைஞர் விருது கிடைக்கப்பெறவில்லை என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். இத்துடன் கலைஞனின் வரலாற்றுச் சுருக்கம் இணைக்கப்பட்டுள்ளது.
(கலைஞனின் வரலாற்றுச் சுருக்கம் நூல் உருவாக்கத்திற்கு ஏற்ற வகையில் தொகுத்து கலாசார உத்தியோகத்தரால் வழங்கப்படல் வேண்டும்)

.......................................  ........................
கலாசார உத்தியோகத்தர் ஒப்பம்  திகதி
(பதவி முத்திரை)

............................................................... கலைஞரை.........................................
கலைத்துறையில் 2024ஆம் ஆண்டிற்குரிய இளங்கலைஞர் விருதிற்காக சிபார்சு செய்கின்றேன்.

...........................  .......................
பிரதேச செயலாளர்  திகதி
(பதவி முத்திரை)

மேற்படி கலைஞரின் விண்ணப்பம் விருது தெரிவுக்காக அனுமதிக்கப்படுகின்றது/ அனுமதிக்கப்படவில்லை

............................  ............................
திகதி  பிரதிப்பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் அலகு.